அசல் வழக்கு எண்.58/2020 வா.சா.2 ஆறுமுகம் த/பெ கண்ணுகவுண்டர்

**21.02.2024 - 4 மற்றும் 5ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்கு சொத்து பற்றி எனக்கு தெரியும். வழக்கு சொத்தானது வாதியின் தகப்பனார் பூபதி கிரயம் பெற்ற சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தினை 1ம் பிரதிவாதி பூபதி 4ம் பிரதிவாதி இளங்கோ என்பவருக்கு 2007ம் ஆண்டில் கிரயம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதன்பிறகு 4ம் பிரதிவாதி வழக்கு சொத்தினை 5ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்துவிட்டார் என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது.

2. வாதி பல வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரை சேர்ந்த ராஜகுமாரி என்ற பெண்ணை காதல் திருமணம் செய்து ஊரைவிட்டு சென்றுவிட்டார் என்றால் சரிதான். திருமணம் ஆனதிலிருந்து 12 வருடங்களாக வாதி பெற்றோரை விட்டு பிரிந்து தனியாக தான் வாழ்ந்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான்.

3. நான் எங்கள் ஊர் ஆகாரத்தில் முன்னால் தலைவராக இருந்துள்ளேன் என்றால் சரிதான். வழ்கக்கு சொத்து ஆகாரம் கிராமத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். நானும் ஆகாரம் கிராமத்தில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 4ம் பிரதிவாதிக்கு விற்ற விவரம் எனக்கு தெரியும் என்றும் ஆனால் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதே போல் 4ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 5ம் பிரதிவாதிக்கு விற்ற விவரம் எனக்கும், வாதிக்கும் தெரியும் என்றால் எனக்கு தெரியாது வாதிக்கு அந்த விவரம் தெரியுமா என்று எனக்கு தெரியாது. நான் தேர்தல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாக 5ம் பிரதிவாதிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. எனக்கு 1 முதல் 5ம் பிரதிவாதிகள் வரை தெரியுமா என்றால் தெரியும். வாதி திருமணம் செய்த பெண் எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து உள்ள ஊரில் நான் வசித்து வருவதால் தற்போது வழக்கு சொத்தை யார் அனுபவித்து வருகிறார்கள் என்று எனக்கு தெரியும் என்றால் சரிதான். தற்போது பூபதி தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்.

5. வாதிக்கு வழக்கு சொத்தில் சம்மந்தம் இல்லை என்றும் வழக்கு சொத்து 1ம் பிரதிவாதியின் சுய சம்பாத்திய சொத்து என்றும் 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 4ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்றும் அதன்பிறகு 4ம் பிரதிவாதி வழக்கு சொத்தை 5ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்தார் என்றும் அன்றிலிருந்து 5ம் பிரதிவாதிதான் வழக்கு சொத்தினை அனுபவித்து தனது பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளார் என்றால் சரியல்ல.